**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் (கடன்- 3409 – எஸ்ஆர்ஜ) - 2021**

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளன. மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23,068.80 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 16,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 6,508.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இந்தத் திட்டம் 29 ஜுன் 2017 அன்று அதன் செயல்பாடுகளைத் தொடங்கி, 31 மார்ச் 2022க்குள் முடிக்க திட்டமிடப்பட்டு, பின்னர் 2023 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எந்த அறிக்கையின் 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **இல** | **கணக்கீட்டுக் குறைபாடுகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | வகை ஆ இற்குள் வருவதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தினை 14 வருடங்களாக கருதி பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் தவறுதலாக மேற்கூறப்பட்ட வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் 7 வருடங்களாக கருதி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் பெறுபெறாக ரூபா 29.67 மில்லியன் தொகையான ஓர் மேலதிக ஏற்பாடு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்தது. | இது 2022 ஆம் ஆண்டில் சீர் செய்யப்பட்டுள்ளது. | தேவைப்பாடுகளின் பிரகாரம் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது செலுத்தவேண்டியவைகளாக காட்டப்பட்ட ரூபா 25 மில்லியன் தொகையான குறைபாட்டு பொறுப்புக்கால இழப்பு மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானங்களாக பதியப்பட்டிருந்தது. | இது 2022 ஆம் ஆண்டில் சீர் செய்யப்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டு முறைமை பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கழிக்கப்படக்கூடிய மொத்த உயர்ந்தபட்ச தொகை ரூபா 20.9 மில்லியனாக இருந்தும் கூட்டுமொத்தம் ரூபா 25.2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைபாட்டு பொறுப்புக்கால இழப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இது 2022 ஆம் ஆண்டில் சீர் செய்யப்பட்டுள்ளது. | சரியான தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். |
| (ஈ) | ஆதனம் பொறி மற்றும் உபகரணம், காணிகள் மதிப்பீடு மற்றும் நிலஅளவை மீது ஏற்பட்ட செலவினங்கள் ஏனைய செலவினங்களாக கருதப்பட்டு நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டதனால் ரூபா 26 மில்லியனினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பேரேட்டு அட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு மற்றும் நிலஅளவை செலவினங்கள் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண களஞ்சியசாலைகளில் காணப்படும் ரூபா 4,244.4 மில்லியன் தொகையான இருப்புக்களின் இருக்கும் தன்மை தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | டீடீ2 இனால் பராமரிக்கப்பட்ட மூலப்பொருள் மாற்றல் பதிவேடுகளின் பட்டியல் மற்றும் பொருட்கள் பெறுகை குறிப்புக்கள் என்பன கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய களஞ்சியசாலைகளிடமிருந்து உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்த டீடீ2 அதேபோல் விநியோக களஞ்சியசாலைகளில் முறையான பதிவேடு பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தின் செயற்பாடுகளிற்காக ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் பராமரிக்கப்பட்ட விசேட வெளிநாட்டு நாணய வங்கிக்கணக்குகள் மீது கிடைக்கப்பெற்ற ரூபா 845,386 தொகையான வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வேறாக காட்டுவதற்கு பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் வட்டி வருமானங்கள் எல்கேஏஎஸ் 7 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் வேறாக வெளிப்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | மக்கள் வங்கியில் பராமரிக்கப்படும் விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்குகளிற்கு கிடைக்கப்பெற்ற வட்டிகள் அதேபோல் கட்டுநிதி கணக்குகளிற்கு (ஏடிபி இடமிருந்து) கிடைக்கப்பெற்ற நிதிகளிற்காக செலுத்தப்பட்ட வட்டி என்பன நடைமுறைவேலையின் கீழ் பதியப்பட்டுள்ளதுடன் டபள்யுஜபி யின் தேறிய தொகை நிதிக்கூற்றுக்களில் வேறாக காட்டப்பட்டுள்ளது. மேலும் விசேட வெளிநாட்டு நாணய வங்கிக்கணக்கின் மீது பெறப்பட்ட வட்டி கடன் பயன்படுத்தலை குறைக்கும். | முறையான வெளிப்படுத்தல் தேவைப்படுகின்றது. |
| (எ) | நடைமுறை வேலைக்கூற்றின் பிரகாரம் பொதிகள் 1,2,3,4,5 மற்றும் 6 இன் மீது 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 3,295.8 மில்லியனாக இருந்தது. இருப்பினும் இலங்கை மின்சார சபையின் மூலதன பங்களிப்பின் கீழாக நடைமுறைவேலையில் காட்டப்பட்ட ரூபா 244.3 மில்லியன் அதனை வேறாக அடையாளப்படுத்த கணக்காய்விற்கு எவ்வித பதிவுகளும் காண்பிக்கப்படாததனால் உறுதிப்படுத்தமுடியாமல் இருந்தது. | மொத்த நடைமுறை வேலைத்தொகையானது அனைத்து செலவின குறியீட்டு மீதிகளின் மொத்தத்தில் உள்ளடங்குகின்றது. | முறையான பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு காண்பிக்கப்படலும் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் 2018 செப்டம்பர் 18 ஆம் திகதிய பொது நிறுவன சுற்றறிக்கை இல பிஈடி 01/2018 | இரண்டு விளையாட்டு பயன்பாட்டு வாகனம் மற்றும் பதினாறு நான்கு சக்கர இயக்க இரட்டை கெப்கள் என்பன 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது முறையே 46.8 மில்லியன் மற்றும் 153.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வாகனங்களின் பெறுகைக்கான அனுமதி சுற்றறிக்கையின் தேவைப்பாட்டின் பிரகாரம் பொதுத்துறைகள் திணைக்களத்திடமிருந்து தவிசாளர் மற்றும் வரிசையமைச்சின் செயலாளர் ஊடாக முயலப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ஒதுக்கீடு செய்ய சீஈபி யிடம் எவ்வித வாகனங்களும் காணப்படாததனால் ஓர் சில வாகனங்கள் வலு சக்தி அமைச்சில் நிறுவப்பட்ட ஓர் குழுவிடமிருந்து அனுமதி பெறப்பட்ட பின்னர் செயற்திட்ட வேலைப்பரப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2005.01.31 ஆம் திகதிய பொது நிறுவன சுற்றறிக்கை இல பிஈடி 28 | பொதுத்துறைகள் பொதுப்பணிப்பாளரிடமிருந்து தேவையான அனுமதி மீளாய்வாண்டின் போது ரூபா 8.5 மில்லியன் கிரயத்தில் வாகனங்களை வாடகைக்கு எடுக்க பெறப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையின் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளின் பிரகாரம் அனைத்து தெவையான அனுமதிகளும் உரிய பெறுகை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |
| (இ) | நிதி ஒழுங்கு விதி 507 | திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பௌதீக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீஈபீ இன் நிபந்தனைகள் மற்றும் வழகாட்டல்களின் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பௌதீக மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. மதிப்பாய்வு ஆவணங்கள் கணக்காய்வு நோக்கத்திற்காக உரிய பிரிவுகளிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | நிதி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2016 ஜூன் 10 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல 02/2016 மற்றும் நிதி ஒழுங்கு விதி 133 | செயற்திட்டத்திற்கான ஓர் உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கணக்காய்வுகளையும் செய்கின்றது மேலும் அதனால் வேறான உள்ளக கணக்காய்வாளர் சீஈபீ இல் நியமிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சீஈபீ இன் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 2.1.2 மற்றும் 2.2.1 | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் பிஎம்யுவிற்கு உத்தியோகத்தர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 74 ஆக இருந்ததுடன் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 93 ஆகவிருந்தது. இருப்பினும் பொதி 1,2 மற்றும் 3 சீஈபீ இன் மேலதிக பொது முகாமையாளரின் கீழான (BB2) டீஜீஎம் (P&B) BB1 வினால் கையாளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. ஓர் தனியான பிஎம்யு பொதி 4,5 மற்றும் 6 இனை நிறைவேற்ற 2016 மே 02 இல் சீஈபீ இன் 1 மேலதிக பொது முகாமையாளரின் (BB1) கீழ் நிறுவப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஓர் மேலதிக பொது முகாமையாளர் (செயற்திட்டங்கள்) பொதி 7 இனை நிறைவேற்ற நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக ஓர் தனிப்பட்ட செலவினங்களாக கூட்டுமொத்தம் ரூபா 385 மில்லியன் மற்றும் 44 மில்லியன் முறையே பொதி 1 இலிருந்து 6 மற்றும் பொதி 7 இற்காக ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அனுமதி பெறப்படல் வேண்டும். |
| (ஊ) | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 9. | செயற்திட்டத்திற்காக ஓர் வழிகாட்டல் குழுவினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயலாற்றல் சீஈபி இனால் முறையாக கண்காணிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |

## 2.3 மிகுதிகளின் உறுதிப்படுத்தல்

| இல | கணக்கு விபரங்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகை | | தொடர்புடய பதிவுகளின் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடய பதிவுகளின் பிரகாரம் ரூபா | | | |
| (அ) | நடைமுறை வேலை பங்கீட்டு பிரிவு 02. | 4,244,417,042 | மாகாண களஞ்சியங்களினால் செயற்திட்ட இருப்புக்களின் பெறுவனவுகள் மீது தனியான பதிவேடுகள் பராமரிக்கப்படாததனால் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | உறுதிப்படுத்தல்கள் மற்றும் உரிய களஞ்சியங்களிலிருந்தான இருப்பு பதிவுகள். | தொடர்புடைய ஜீஆர்என் கள் மற்றும் எம்ஜஎன்கள் என்பனவற்றின் பட்டியல் டீடீ2 இனால் பராமரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | மாகாண களஞ்சியங்களினால் செயற்திட்ட இருப்புக்களின் பெறுவனவுகள் மீது தனியான பதிவேடுகள் பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 இற்கான வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய வைகள். | 6,092,924 | மிகுதி உறுதிப்படுத்தல்கள் பெறப்படவில்லை. | உறுதிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கவில்லை. | அனுப்பப்பட்ட மிகுதியினை உறுதிப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 53) | மிகுதிகள் உறுதிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பதில்கள் கணக்காய்விற்கு அனுப்பப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| இல | கூறு / உப கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் பௌதீக | அடையப்பட்ட செயலாற்றல் நிதி | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | **பொதி 1** | | | | 2021 4வது காலாண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் மூலப்பொருட்கள் வழங்கள் 2019 1வது காலாண்டில் முடிவடைவதுடன் கொடுப்பனவுகள் 2020 2வது காலாண்டில் பூர்த்தியாகின்றது. இருப்பினும் கொடுப்பனவுகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்ப்பணவு செய்யப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உரிய ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் பத்திரங்கள் ஏடிபி மற்றும் கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | லொட் 1 இன் கீழான பொதி 1 இன் அனைத்து பொருட்களும் சீஈபீ இற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இறுதி 10% கொடுப்பனவு தாமத விநியோகம் காரணமாக குறைபாட்டு பொறுப்புக்கால இழப்புக்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிடம ிருந்து குறைபாட்டு பொறுப்புக்காலம் இழப்புக்களினை கழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | லொட் 1: காங்கிறீட் தூண்கள் - 8.3மீ, 1000கி.கி (15,000) | 100 | 100 | 89.97 | | | |
| | லொட் 2: காங்கிறீட் தூண்கள் - 8.3மீ, 1000கி.கி (15,000) | 100 | 100 | 99.99 | | | |
| | லொட் 3: காங்கிறீட் தூண்கள் - 8.3மீ, 1000கி.கி (20,000) | 100 | 100 | 99.10 | | | |
| | லொட் 5: காங்கிறீட் தூண்கள் - முன்னர் வலியுறுத்தப்பட்ட 11மீ 350கி.கி (2,000) | 100 | 100 | 99.32 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | **பொதி 2** | | | | 2020 4வது காலாண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் மூலப்பொருட்கள் வழங்கள் 2018 3வது காலாண்டில் முடிவடைவதுடன் கொடுப்பனவுகள் 2020 2வது காலாண்டில் பூர்த்தியாகின்றது. இருப்பினும் கொடுப்பனவுகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உரிய ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் பத்திரங்கள் ஏடிபி மற்றும் கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>வெளியீடு 3: பொருட்கள் நிறுவல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | லொட் 2 இன் கீழான பொதி 3 இன் அனைத்து பொருட்களும் சீஈபீ இற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.<br>இறுதி 10% கொடுப்பனவு தாமத விநியோகம் காரணமாக குறைபாட்டு பொறுப்புக்கால இழப்புக்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிடம ிருந்து குறைபாட்டு பொறுப்புக்காலம் இழப்புக்களினை கழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | லொட் 1 : எம்வி & எல்வி வன்பொருள் கொள்வனவு. | ரத்துச்செய்யப்பட்டது. | | | | | |
| | லொட் 2 : | வேலைப்பரப்பிலிருந்து நீக்கப்பட்டது. | | | | | |
| | லொட் 3 : பிவிசி மீற்றர் இணைப்புக்கள் தனி பிஎச் (100,000 எண்ணிக்கை) | 100 | 100 | 90 | | | |
| (இ) | **பொதி 3** | | | | வழங்குனர் விலை மாறலிற்காக வேண்டியிருந்தார். 2020 4வது காலாண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் மூலப்பொருட்கள் வழங்கள் 2018 3வது காலாண்டில் முடிவடைவதுடன் கொடுப்பனவுகள் 2020 2வது காலாண்டில் பூர்த்தியாகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இருப்பினும் கொடுப்பனவுகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உரிய ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் பத்திரங்கள் ஏடிபி மற்றும் கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>வெளியீடு 3: பொருட்கள் நிறுவல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கவில்லை. | பிணக்குகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | லொட் 3 : 14 கி.மீ கேபில்கள் | 100 | 100 | 99.99 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஈ) | பொதி 4<br><br>270 கெவி, 33 கெவி கோபுர வரிசைகள் 13 எண்ணிக்கையான 33 கெவி 2 எஸ்எஸ்பீ கான்றீஸ் இன் நிர்மானம். | 100 | 41 | 34 | டீடீ1, டீடீ2, டீடீ3 மற்றும் டீடீ4 இன் பதினாறு கொபுர கம்பங்களின் செயலாற்றலை ஆய்வு செய்த போது அவைகளில் எவ்வித கோபுர கம்பங்களிற்கும் மண் பரிசோதனை 100% பூர்த்திசெய்யப்படவில்லை.<br>புத்தளம் ஜீஎஸ்எஸ் தொடக்கம் கிரியந்தலாவ வரையான 28.2 கி.மீ மற்றும் இரண்கண்டி கான்றீ தொடக்கம் கும்புறுபிட்டிய கான்றீ இன் 7.5 கி.மீ முறையே 35% மற்றும் 40% மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.<br>சொய்ஸி கான்றீ தொடக்கம் தவலன்தென்ன வரையான 6 கி.மீ 0% செயலாற்றலுடன் உள்ளது.<br><br>பதினாரில் இரண்டு கோபுர கம்பங்களின் சுயவிபர வடிவமைப்பு மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.<br>குறைந்தளவான செயலாற்றல் புத்தளம் ஜீஎஸ்எஸ் தொடக்கம் கிரியந்தலாவ வரையான 28.2 கி.மீ 10% பூர்த்தியாக்கலுடன் மாத்திரம் இருந்தது.<br>100% கோபுர கண்டுபிடிப்பின் செயலாற்றல் இரண்டு கோபுர கம்பங்களில் மாத்திரமே அவதானிக்கப்பட்டிருந்தது.<br>இருப்பினும் செயலாற்றல் புத்தளம் ஜீஎஸ்எஸ் தொடக்கம் | 1. மண் பரிசோதனை : டீடீ1 – 71.7%, டீடீ2 - 80.0%, டீடீ3 - 86%, டீடீ4-73%<br>2. புத்தளம் ஜீஎஸ்எஸ் தொடக்கம் கிரியந்தலாவ வரையில் மண்பரிசோதனை 35%, இரண்கண்டி கான்றீ தொடக்கம் கும்புறுபிட்டிய வரையில் மண்பரிசோதனை 100%.<br>3. சொய்ஸி – தவளந்தென்ன கம்பம் : தற்போது கம்பத்திற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் கம்ப வடிவமைப்பு வேலை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மண் பரிசோதனை வேலை ஆரம்பிக்கப்படும்.<br>4. தோற்ற வடிவமைப்பு அனைத்து 16 கம்பங்களிலும் 70%ற்கு மேல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.<br>5. கோபுர நிறுவல் 90%. மேலும் மிகுதி கடினமான நிலப்பகுதி மற்றும் காணி உரிமையாளர் மறுப்புக்கள் போன்றன காரணமாக மீதமாகவுள்ளது.<br>6. பதினாறில் 11 கோபுர கம்பங்களின் அடித்தள நிர்மான செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>மஹியங்கனை – பிபில – | வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் ஒப்பந்ததாரர்களின் வேலைகளை உன்னிப்பாக கண்கானித்தல் வேண்டும். |

கிரியந்தலாவ வரையான 28.2 கி.மீ இன் மீது 0%.

அதே நேரம் 20% தொடக்கம் 40% செயலாற்றல் விமலசுரேந்திர ஜீஎஸ்எஸ் தொடக்கம் மஸ்கெலிய கான்றீ 10 கி.மீ, இரண்கண்டி கான்றீ தொடக்கம் கும்புறுபிட்டிய கான்றீ 7.5 கி.மீ மற்றும் கப்பல் துறை கான்றீ தொடக்கம் மைல் போஸ்ட் கான்றீ 13.6 கி.மீ போன்றனவற்றில் அவதானிக்கப்பட்டது.

சொய்ஸி கான்றீ தொடக்கம் தவளந்தென்ன 6 கி.மீ, மாத்தறை ஜீஎஸ்எஸ் தொடக்கம் யகபெந்த ஜீடி 21 கி.மீ எவ்வித செயலாற்றலையும் காட்டியிருக்கவில்லை.

பதினாறில் ஏழு கோபுர கம்பங்கள் மாத்திரமே அடித்தளமிடல் செயன்முறையை ஆரம்பித்திருந்தது. மூன்று கொபுர கம்பங்கள் 29% தொடக்கம் 36% செயலாற்றலினை காட்டியிருந்த அதே நேரம் ஏனைய நான்கும் 5.4% க்கு கீழான மிகவும் குறைந்த செயலாற்றலை காட்டியது.

பதின்மூன்று கான்றீ காணிகளின் காணி சுவீகரிப்பு பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் நிர்மானம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரே ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

55%

மாஹோ – மீலிய – 53% அம்பாறை – உஹன – 39% கப்பல் துறை – 6வது மயில் கட்டை – 21% மொறவாக்க – வருகந்தெனிய – 19% மல்லவாபிட்டிய – ரத்மல்கொட – 16.9% விமலசுரேந்திர – மஸ்கெலிய – 16.3% கேகால்ல – கெவில்பிட்டிய - 1.4%

7. 38அ வர்த்தமானி பதின்மூன்றில் 9 கான்றீ காணிகளிற்காக வழங்கப்பட்டிருந்தது. பிபில மற்றும் உஹன கான்றீ காணிகள் அரச உடமையானதுடன் தெளிவாக்கப்பட்டுள்ளது. வருகந்தெனிய காணியினது காணி ஆணையாளர் அதிபதி திணைக்களத்திடமிருந்தான அனுமதி நிலுவையிலுள்ளது. ரத்மல்கொட கான்றீ யின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பின் நிலை.<br>வெளியீடு 2: ஒப்பந்தம் 2019 மே இல் கையொப்பமிடப்பட்டது & அமுல்படுத்தல் தாமதங்களுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. | | |
| (உ) | **பொதி 5** | | | | 2020 ஆம் ஆண்டின் 4 வது காலாண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் லொட் 1 இற்கான கொடுப்பனவுகள் 2020 இல் 1வது காலாண்டு முடிவில் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். இருப்பினும் கொடுப்பனவு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு சட்டகத்தின் நிலை.<br>வெளியீடு 2 : உபகரண நிறுவல் பூர்த்திசெய்யப்படவில்லை. | வெளியீடு 1 – லொட் 1, விலை மனுவில் கூறப்பட்டிருந்த தலை முடிவுறுத்தல் முறைமை பயிற்சியளிப்பிற்கான கொடுப்பனவு தவிர்ந்த அனைத்து கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருந்தன. கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக இது தாமதமடைந்திருந்தது.<br>வெளியீடு 2 மாகாணங்களினால் செய்யப்பட்ட லொட் 1 மற்றும் 4 இன் உபகரண நிறுவல், ட்ரான்ஸ்போமர்களிற்கான புதிய மானி நிறுவல் வேலை அவர்களது ஊழிய இயலளவுடன் ஒவ்வொரு மாகாணத்தினாலும் செய்யப்பட்டிருந்தது. | மிகுதி வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | லொட் 1 : மூலப்பொருட்களின் வழங்கள் மற்றும் விநியோகம்: மூன்று கட்ட வலுமீற்றர்கள் மற்றும் மொடம்ஸ் (25,000 எண்ணிக்கை) | 100 | 100 | 99.5 | | | |
| | லொட் 4 : மூலப்பொருட்களின் வழங்கள் மற்றும் விநியோகம்: கம்பி மீற்றர் இணைப்புக்கள் (25,000 எண்ணிக்கை) | 100 | 100 | 92.5 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | லொட் 5 : மூலப்பொருட்களின் வழங்கள் மற்றும் விநியோகம்: ஏபீசீ 33 கேவி மற்றும் உதிரிப்பாகங்கள் (80.1 கி.மீ), சேர்ச் அரஸ்டர் மற்றும் வெட்டு சுவிச் (ஒவ்வொன்றும் 1200 எண்ணிக்கைகள்) | 100 | 100 | 96 | | | |
| (ஊ) | பொதி 6<br><br>நாகதீப, டெல்ப்ட் & அனலிதீவு போன்றவற்றிலுள்ள 3 தீவுகளில் கலப்பு வலு முறைமைகளின் நிர்மானம். | 100 | - | - | 450.28 பேர்ச்சஸ் விஸ்தரிப்பிற்காக நாகதீபயிலுள்ள காணி 2020 ஜூலை 21 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மான நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் டெல்ப்ட் மற்றும் அனலி தீவிலுள்ள காணிக்கான காணி ஒதுக்கீட்டு செயன்முறைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. வெளியீடு 1 இல்: மூன்று சிறிய தீவுகளில் நிறுவப்பட்ட 900 கிலோவாட் மணித்தியால சேமிப்பு | அமைச்சரவை இக்குறித்த ஏலத்தினை ரத்துசெய்துள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகள் கடன் வழங்குனர்களுடன் உடன்படிக்கையில் ஈடுபட முன்னர் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இயலளவுடனான கலப்பு சிறு சட்டக முறைமைகளின் மொத்தம் 2.27 மெகாவாட்ஸ் இன்னும் கையளிக்கப்படவேண்டியுள்ளது. | | |
| (எ) | பொதி 7 | | | | குறிப்பிட்டளவு தாமதங்கள் காரணமாக, ஒட்டுமொத்த செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்படலாம். | பொதி 7 லொட் ஏ1 இன் ஒப்பந்தமானது கோவிட் 19 நோய்த்தொற்றுப்பரவல், கோவிட் 19 இன் உலகலாவிய தாக்கம் காரணமாக மூலப்பொருள் வழங்கலில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக தாமதமடைந்திருந்தது. | தாமதங்களை குறைக்கவும் மேலதிக கிரயங்களை குறைக்க ஒப்பந்த வேலைகளை நேரத்திற்கு பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | லொட் ஏ1: பன்னிபிட்டிய மின்சார வினியோக அமைப்பின் உபநிலையத்தில் 100 எம்விஏஆர் பீஎஸ்சீ நிறுவல். | 100 | 82 | 77 | | | |
| | லொட் ஏ2: பியகம மின்சார வினியோக அமைப்பின் உபநிலையத்தில் நிலையான வார் முறைமைகளின் நிறுவல். | 100 | 48 | 30 | | | |

| | | | |
|---|---|---|---|
| லொட் ஏ3: கொழும்பு நகர மின்சார வினியோக அமைப்பின் உபநிலையத்தில் 124எம்வார் அலை சுவிட்ச் மின்தேக்கி வங்கிகள் நிறுவல் மற்றும் துல்கிரிய மின்சார வினியோக அமைப்பின் உபநிலையத்தில் மின்தேக்கி வங்கிகளை மாற்றியமைத்தல். | 100 | காண்பிக்கப் படவில்லை. | காண்பிக்கப்படவில் லை. |

### 3.2 செயற்திட்ட நடவடிக்கைகளின் ஆரம்பிப்புக்கள் / அமுல்படுத்தல் / பூர்த்தியாக்களில் தாமதம்.

| இல | நடவடிக்கை | ஆரம்பிப்புக்க / அமுல்படுத்த / பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்ட திகதி | ஆரம்பித்த / அமுல்படுத்திய / பூர்த்தியாக்கிய திகதி | தாமதம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | மூன்று சிறிய தீவுகள் - நாகதீப, டெல்ப்ட் & அனலிதீவு போன்றவற்றில் கலப்பு புதுப்பிக்கத்தக்கவலு முறைமைகளின் நிறுவல். | ஒப்பந்தம் 2016 இன் 3வது காலாண்டளவில் கையளிக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் 2017 4வது காலாண்டளவில் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நைநாதீவில் உள்ள காணி மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கையளிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 5 ½ வருடங்களிற்கு மேலும் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து கூட 4½ வருடங்கள். | அமைச்சரவை இக்குறித்த ஏலத்தினை நிராகரித்திருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல். | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் ஐ.அ.டொலர் 34.99 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையிலான 270.5 கி.மீ நீளமான 33 கேவி கோபுர கம்பங்கள் மற்றும் 13 எண்ணிக்கையான 33 கேவி கான்றீஸ் என்பன 2016 இன் 3வது காலாண்டில் கையளிக்கவேண்டிய தேவை இருந்ததுடன் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் 2017 இன் 4வது காலாண்டளவில் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் ஐ.அ.டொலர் 40.5 மில்லியன் கிரயத்தில் 2019 மே 30 இல் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இவ் ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் திகதி 2019 ஜுலை 6 ஆக இருந்தது. 13 எண்ணிக்கைகளான கான்றீ காணிகள் இப்பொதியின் கீழ் கான்றீ நிர்மானத்திற்காக கொள்வனவு செய்ய அளவிடப்பட்டிருந்தும், | கையளிக்க பட்டியலிடப்பட்ட திகதி மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் பொதி 4 இன் நடவடிக்கைகளை ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதி போன்றவற்றிலிருந்து 2½ வருடங்களிற்கு மேல் | 38அ வர்த்தமானி ஆனது 13 இல் 9 கான்றீ காணிகளிற்காக வழங்கப்பட்டிருந்தது. பிபில மற்றும் உஹன கான்றீ காணிகள் அரச உடமையாக்கப்பட்டு சீராக்கப்பட்டுள்ளன. வருகந்தெனிய காணி நீண்டகால குத்தகைக்காக காணி ஆணையாளர் அதிபதி திணைக்களத்திடமிருந்தான அனுமதி நிலுவையிலுள்ளது. சிவில் நிர்மான வேலைகள் ரத்மல்கொட கான்றீ ஆரம்பிக்கப்பட்டது. 11 கோபுர கம்பங்களில் | வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் ஒப்பந்ததாரர்களின் வேலைகளை உன்னிப்பாக கண்கானித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிர்மான வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1,211 இல் 204 அடித்தளங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 59 கோபுரங்களின் இடங்களில் அடித்தள நிர்மான வேலைகள் செயன்முறையிலுள்ளது. நாட்டில் காணப்பட்ட கோவிட் நோய்த்தொற்று பரவல், பாதகமான காலநிலை, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலைத்தளம்பல்கள் போன்றன காரணமாக ஒப்பந்ததாரரின் செயலாற்றல் குறிப்பிட்டளவு குறைவாக காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. | |
| பொதி 5 லொட்4 : மூலப்பொருட்களின் வழங்கள் மற்றும் விநியோகம்: கம்பி மீற்றர் இணைப்புக்கள் (25,000 எண்ணிக்கை) 2016 இன் 3வது காலாண்டில் கையளிக்க வேண்டியுள்ளதுடன் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் 2017 இன் 4வது காலாண்டளவில் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் 2019 ஆகஸ்ட் 22 இலேயே மீளஏலமிடப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்பாடுகள் 2019 ஒக்டோபர் 08 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | கையளிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களிற்கு மேல் மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து கூட 4 வருடங்கள். | ஆரம்பகட்ட ஏலம் 2017 ஒக்டோபரில் வெளியிடப்பட்டிருந்துடன் பின்னர் 2018 திசெம்பரில் மீள ஏலமிடப்பட்டிருந்தது. பொருட்கள் 2020 இன் போது விநியோகிக்கப்பட்டிருந்தது. | வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்ததாரர்களின் வேலைகளை உன்னிப்பாக கண்கானித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) மேம்படுத்தப்பட்ட ஒளிபரப்பு முறைமையில் எதிர்வினை வலு முகாமைத்துவம். | கூட்டுமொத்தம் ரூபா 2,941.92 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20.43 மில்லியன் இப்பொதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2017 இன் 1 வது காலாண்டில் கையளிக்கப்பட வேண்டியிருந்ததுடன் செயற்பாடுகள் 2018 இன் 2வது காலாண்டளவில் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. | | | | |
| | லொட்1 : பேராதெனிய மின்விநியோக அமைப்பின் உபநிலையத்தில் 100 எம்விஏஆர் பிரேக்கர் சுவிச்ட் மின்தேக்கி நிறுவல். | ஒப்பந்தம் ரூபா 166.05 மில்லியன், ஐ.அ.டொலர் 1.5 மில்லியன், யூரோ 3.76 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2019 மே 9 இல் கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட செயற்பாடுகள் 2019 ஆகஸ்ட் 01 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | கையளிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 2 1/2 வருடங்களிற்கு மேல் மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்கள். | பதிலளித்திருக்கவில்லை. | வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய துடன் ஒப்பந்ததாரர்களின் வேலைகளை உன்னிப்பாக கண்கானித்தல் வேண்டும். |
| | லொட் 2 : பியகம மின்விநியோக அமைப்பின் உபநிலையத்தில் நிலையான வார் முறைமைகள் (SVS) | ஒப்பந்தம் 2020 மே 28 இலேயே கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட செயற்பாடுகள் 2020 ஒக்டோபர் 08 இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில் லை. | கையளிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 1 1/2 வருடங்களிற்கு மேல் மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடம். | பதிலளித்திருக்கவில்லை. | வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய துடன் ஒப்பந்ததாரர்களின் வேலைகளை உன்னிப்பாக கண்கானித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| லொட் 3 : கொழும்பு நகர மின்விநியோக அமைப்பின் உபநிலையத்தில் 124 எம்விஏஆர் பிரேக்கர் சுவிச் மின்தேக்கி நிறுவல் மற்றும் துல்கிரிய மின்விநியோக அமைப்பின் உபநிலையத்தில் தொனிப்பிரப்பாக்கப்பட்ட பிரேக்கர் சுவிச் மின்தேக்கி மாற்றியமைத்தல் (செயற்திட்ட நிர்வாக கையேட்டில் இல்லை.) | ஒப்பந்தம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கையளிக்கப்பட்டிருக்கவில் லை. | செயற்திட்டம் செயற்திட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தினை கையளிக்க முடியாமலிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை. | மேலும் தாமதமின்றி ஒப்பந்தத்தை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 முன்னய கணக்காய்வு அறிக்கைகளில் கூறப்பட்டு இன்னும் தீர்க்கப்படாமல் கானப்படும் விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட இருப்பு மீதிகள் மாகாண களஞ்சியங்களில் அடையாளப்படுத்த முடியாமல் இருந்தது. | பதிலளிக்கவில்லை. | செயற்திட்டத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற இருப்பு மீதி மாகாண களஞ்சியத்தில் முறையான இருப்பு கட்டுப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கடன் கொடுனர்களின் நீண்டகால செலுத்தவேண்டிய மீதிகள். | முன்னைய கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்ட நீண்டகால செலுத்தவேண்டிய மீதிகள் சரிசெய்யப்பட்டிருந்தன (பொதி1 லொட்1 & பொதி2 லொட்3) | கடன்கொடுனர்களுடன் தொடர்புபட்ட விடையங்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து பெறுகை செய்யப்பட்ட வாகனங்களிற்காக பொதுத்துறைகள் திணைக்களத்திடமிருந்து தவிசாளர் மற்றும் அமைச்சின் செயலாளரின் ஊடாக செய்யப்பட்ட வாகனப்பெறுகைக்கான அனுமதியின் பிரதிகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | சீஈபி ஆனது செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ஒதுக்க எவ்வித வாகனங்களும் இல்லாததனால் ஓர் சில வாகனங்கள் வலு சக்தி அமைச்சு நிறுவப்பட்ட ஓர் குழுவிடமிருந்து அனுமதி பெறப்பட்டதன் பின்னர் செயற்திட்ட வேலைப்பரப்பின் கீழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. | முறையான அனுமதிகள் பெறப்படல் வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின்பரிந்துரைகள் |
|---|---|---|
| குான்றீஸ்களை நிர்மானிக்க அரச காணி மற்றும் இலங்கை மின்சார சபை காணி உள்ளடங்களாக கொள்வனவு செய்ய எதிர் பார்க்கப்பட்டிருந்த 14 காணித்துண்டுகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித காணிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி பிரிவு 38(அ) வின் கீழ் காணி சீஈபீ இற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |